# PROBLEMS FACED BY CONVERTS TO ISLAM IN SRI LANKA: A STUDY BASED ON ANURADAPURA DISTRICT

**Ahamed Sarjoon Razick (1), Ameer Rushana (2)**

[1,2] Department of Islamic studies, South Eastern University of Sri Lanka

sarjoonra@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும பறங்கியர்கள் வாழக்கூடிய பல்லின சமூகத்தைக் கொண்ட ஒரு நாடாகக் காணப்படுகின்றது.வடமத்திய மாகாணத்தில் அமையப் பெற்றுள்ள அனுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதவர்களும் பின்னிப் பிணைந்து வாழ்வதால் இஸ்லாம் மார்க்கததின் பக்கம் ஈர்க்கப்பட்டும் மற்றும் பல கலாசார ரீதியான காரணங்களினாலும் முஸ்லிமல்லாதோர் பலர்இஸ்லாத்தை தழுவியுள்ளனர். அவ்வாறு இஸ்லாத்தைத் தழுவியவர்கள் சமூகத்தில் ஒதுக்கப்படல், அவர்களது பெயர் இஸ்லாமியப் பெயர்களாக மாற்றிக்கொள்வதில் சிரமம், சமூகத்தில் அவர்கள் 'மவ்லா இஸ்லாம்' என அழைக்கப்படல், பொது இடங்களில் தீண்டாமை மனப்பான்மையுடன் பார்க்கப்படல், அவர்களது பிள்ளைகள் சமூகத்தில் ஒதுக்கப்படல் போன்ற பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அந்தவகையில் இவ்வாய்வு,இஸ்லாத்தை ஏற்றோர் சமய, சமூக, பொருளாதார ரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிதல் எனும் பிரதான நோக்கத்தில் மேற்கொள்ளப்படுகிறது. மேற்படி மாவட்டத்தில் இஸ்லாத்தை தழுவியுள் 365 பேருள் 65 பேர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு அரைக்கட்டமைக்கப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் ஒன்றின் மூலம் இவ்வாய்வுக்குரிய தகவல்கள சேகரிக்கப்பட்டு கைமுறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பெறுபேறுகளின் படி,சமூக ரீதியாக,திருமணத்தில் வேறுபாடு காட்டப்படல், குடும்பத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படல், மொழிப் பாகுபாடு பார்த்தல், இழிவு மனப்பான்மையுடன் நோக்கப்படல்,தம்பதியினருக்கிடையில் முரண்பாடு மற்றும் விவாகரத்து ஏற்படல்ஆகிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் அதேவேளை, சமய, மற்றும் பொருளாதார ரீதியாக, இஸ்லாமிய அறிவைப் பெறுவதில் தடை ஏற்படல், அல்குர்ஆனைக் கற்றுக் கொள்வதில் சிரமம், பிள்ளைகளை இஸ்லாமிய முறைப்படிவளர்ப்பதில் தடை, இஸ்லாமிய அடிப்படை விடயங்களில் தெளிவின்மை, முஸ்லிமாகப் பெயர் மாற்றம் செய்துகொள்வதில் சிரமம், முஸ்லிம் அடையாளத்தை வெளிப்படுததுவதற்கு சங்கடப்படல்,ஸகாத் கிடைக்கப்பெறாமை, போதிய வருமானமின்மை மற்றும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையை மேற்கொள்ள வசதியின்மை ஆகிய பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றனர். ஆகவே, இவ்வாய்வின் முடிவுகள் சர்வதேச மற்றும் தேசிய அரசு சாரா இஸ்லாமிய நிறுவனங்ளுக்கு இஸ்லாத்தை ஏற்றோர் தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளவும், பிரச்சினைகள் கவனத்திற்கொள்ளப்பட்டு அவை தீர்க்கப்படவும் ஏதுவாய் அமையும்.

**திறவுச் சொற்கள் :** இலங்கை, அனுராதபுரம், இஸ்லாத்தை தழுவிய முஸ்லிம்கள், பிரச்சினைகள்

## 1. அறிமுகம்

பொதுவாக உலகில் பெரும்பாலான நாடுகளில் பல்லின, பல்சமய, பல்மொழி, பல்கலாசாரத்தை சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவற்றில்மொழி மற்றும் சமய சுதந்திரமும் குடிமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.இன்று பொதுவாக அனைத்து நாடுகளிலும் ஏதோ ஒரு இடத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். அவ்விடங்களில் அவர்கள் பெரும்பான்மையினராகவோ அல்லது

சிறுபான்மையினராகவோ தமது உரிமைகள், சுதந்திரம் என்பவற்றைப் பெற்றுக்கொண்டும் கடமைகளைப் பேணிக்கொண்டும் வாழ்ந்து வருவதனை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. சில இடங்களில் தமது இருப்பைப் பாதுகாப்பதற்காக ஏகாதிபத்திய சக்திகளுடன் போராடிக் கொண்டும் இருக்கின்றனர். பல இஸ்லாமிய இயக்கங்கள் இன்று மீண்டும் கிலாபத் ஆட்சியைக் கொண்டுவர போராடிக் கொண்டிருக்கின்றன. இன்னும் சில இயக்கங்கள் இஸ்லாத்தின் போர்வைக்குள் இருந்துகொண்டு பல சர்ச்சைகளை ஏற்படுத்தியவண்ணமும் உள்ளன.

உலகளாவிய மொத்த சனத்தொகை 7.6 பில்லியில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 1.84 பில்லியன் (24.38%) ஆகும். ஐக்கிய நாடுகள் ஒன்றியத்தின் மற்றுறொரு கணிப்பீட்டின் படி மொத்த உலக சனத்தொகையில் 25.12% முஸ்லிம்களாகும் (World Population Prospects, The 2017 Revision). அதில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நாடுகளாக சவுதி அரேபியா (95%), ஆப்கானிஸ்தான் (99.7%), அல்ஜீரியா (99%), பஹ்ரைன் (70.2%), சிரியா (92.8%), ஈரான் (99%), ஈராக் (97%), சூடான் (97%), மொரோக்கோ (99.9%) போன்ற நாடுகளை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். மொத்த முஸ்லிம் சனத்தொகையில் சிறுபான்மை முஸ்லிம்கள் 450 மில்லியன்களாகும். இது உலக முஸ்லிம்களின் 1/3 பங்காகும். ஐவருக்கு ஒருவர் முஸ்லிமாக இருக்க, ஒவ்வொரு 12 முஸ்லிம்களுள் ஒருவர் சிறுபான்மையாவார். ஐரோப்பிய நாடுகளில் மட்டும் முஸ்லிம் சிறுபான்மையினரின் சனத்தொகை 60 மில்லியன்களாக உயர்ந்துள்ளது (World Population Prospects, The 2017 Revision). உலகில் சுமார் 49 நாடுகளில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராகவும் 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் அவர்கள் சிறுபான்மையினராகவும் வாழ்ந்து வருகின்றனர். மத்திய கிழக்கில் 91.2%, தென்கிழக்காசியாவில் 40%, தென்னாசியாவில் 31.4%, ஆபிரிக்காவில் 29.6%, ஐரோப்பாவில் 6%, அமெரிக்காவில் 0.6% என முஸ்லிம்கள் வாழ்கின்றனர் (Pew Research Center Census Report, 2017).

65,610 சதுர கிலோமீற்றர் பரப்பெல்லையைக் கொண்டுள்ள இலங்கை இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கீழ்க் கரைக்கு அப்பால் அமையப்பெற்றுள்ள ஒரு நாடாகும். இது வட அகலாங்கு 6–10 இடையிலும், கிழக்கு நெட்டாங்கு 80–82 இடையிலும் அமைந்துள்ளது. இதன் உயர்ந்த பட்ச நீளம் தெற்கே தெய்வேந்திரமுனை தொடக்கம் வடக்கே பருத்தித்துறை வரை 432 கிலோ மீற்றர் ஆகும். பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், மற்றும பறங்கியர்கள் வாழக்கூடிய பல்லின சமூகத்தைக் கொண்ட ஒரு நாடாக இருப்பதோடு 20,277,597 மக்கள் சனத்தொகையையும் கொண்டுள்ளது. இங்கு பெரும்பான்மையாக பௌத்தர்களும் (70.2%),முதல் சிறுபான்மையினராக இலங்கைத் தமிழர்களும்(12.6%), இரண்டாவது சிறுபான்மையினராக முஸ்லிம்களும் (9.7%), பறங்கியர்களும் (7.4%) வாழ்ந்து வருகின்றனர் (இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், 2012).

இலங்கையில் நிருவாக 25 மாவட்டங்களும், 9 மாகாணங்களும் உள்ளன. அவற்றுள் பெரிய மாகாணமான வடமத்திய மாகாணத்தில் அமையப் பெற்ற ஒரு மாவட்டமாக 'அனுராதபுரம்' காணப்படுகின்றது. ஆரம்பத்தில் *அனுராதகாமம்* என அழைக்கப்பட்டது. இலங்கையை ஆண்ட பண்டுகாபய மன்னன் அனுராதகாமத்தை அனுராதபுரமாக மாற்றி அதனைத் தலைநகராக்கினான். அனுராதபுர மாவட்டமானது 7,179 சதுரகிலோமீற்றர் பரப்பெல்லையை கொண்டுள்ளது (பின்னிணைப்பு - 07). இம்மாவட்டம் ஏழு தேர்தற் தொகுதிகளையும், 22 பிரதேச செயலகப் பிரிவுகளையும், 694 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டுள்ளது. இதில் மொத்தமாக 860,575 மக்கள் வாழ்கின்றனர். இங்கு பெரும்பான்மையாக பௌத்தர்களும் (90.9%), ஏனையோர் சிறுபான்மையினராக அதாவது

முஸ்லிம்கள் 8.0%, இலங்கைத் தமிழர்கள் 1.0%, மற்றும் கிறிஸ்தவர்கள் 1.2% வாழ்கின்றனர். (இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் - அனுராதபுர மாவட்டம், 2012).

அனுராதபுர மாவட்டத்தில் 114 முஸ்லிம் கிராமங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 70,692 முஸ்லிம்கள் வாழ்கின்றனர் (இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், 2012). அனுராதபுர மாவட்டத்தில் பௌத்தர்களும் முஸ்லிம்களும் இணைந்து வாழ்வதால் இஸ்லாம், முஸ்லிம்களைப் பற்றிப் புரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்புகள் அதிகமான ஏற்படுகின்றன. அவர்களின் வேலைத்தளத் தொடர்புகள், அன்னியோன்யம் காரணமாக ஏற்படும் திருமணங்கள்,முஸ்லிம் சமூகத்தவரின்சில முன்மாதிரி நடத்தைகள் போன்ற காரணிகளின் செல்வாக்குமுஸ்லிமல்லாதோரை இஸ்லாத்தை ஏற்கச்செய்வதோடு அதன் வளர்ச்சிக்கும் காரணமாக அமைகிறது. அனுராதபுர மாவட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றோர்பிந்திய ஐந்து வருடங்களில் (2012-2017) 325 நபர்கள் ஆவர். அனுராதபுர நகரம், நாச்சியாதீவு, நொச்சியாகம, கெகிராவ போன்ற பிரதேசங்களில் பெரும்பான்மையாக வாழ்கின்ற பௌத்தர்களோடு முஸ்லிம்கள் இணைந்து வாழ்வதனால் ஒரு சில பௌத்தர்கள் இஸ்லாத்தை ஏற்றுள்ளனர். அவ்வாறே, இக்கிரிகொல்லாவ, மதவாச்சி போன்ற பிரதேசங்களில் இடம்பெயர்ந்த தமிழர்களுடன் முஸ்லிம்கள் இணைந்து வாழ்வதால் அப்பிரதேசங்களில் தமிழர்கள் சிலரும் இஸ்லாத்தை ஏற்றுள்ளனர்.

## 2. ஆய்வுப் பிரச்சினை

இஸ்லாம் முழு அகிலத்துக்கும் அருளப்பட்ட சர்வதேசத் தன்மை கொண்ட ஒரு மார்க்கமாகும். அது குறித்த தேசத்திற்கு அல்லது குறித்த இனத்திற்கு அருளப்பட்டதொன்றல்ல. அதனைத் தழுவும் படி வற்புறுத்துவதும் அதன் தன்மையல்ல. முஸ்லிமல்லாதவர்கள் இஸ்லாம் நோக்கி ஈர்க்கப்படுகின்றமைக்கு பல காரணங்கள் உள்ளன. அல்குர்ஆன் முழுவதையும் படித்த பிறகு சிலர் கவரப்பட்டுள்ளனர், சிலர் குர்ஆனின் சில வசனங்களைச் செவியுற்றதால் ஈர்க்கப்பட்டுள்ளார்கள். வேறு சிலரோ முஸ்லிம்களின் நடத்தைகளால் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். குறித்த சில பிரதேசங்களில் சமூக (தீண்டாமை, திருமணம்), கலாசார மற்றும் பொருளாதார (வறுமை) நோக்கங்களுக்காகவும் இஸ்லாத்தைத் தழுவியுள்ளனர். இவ்வாறு இஸ்லாத்தை ஏற்றறோர் இலங்கையிலும் குறிப்படத்தக்களவானோர் காணப்படுகின்றனர். எனினும் இவ்வாறு இஸ்லாத்தை ஏற்றோர் உள்ளக ரீதியாகவும், வெளியக ரீதியாகவும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்பது அவதானிக்கத்தக்கது. விசேடமாக, அனுராதபுர மாவட்டத்தில் இஸ்லாத்தை தழுவியோர் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எடுத்துக்காட்டாக, குடும்பத்தில் ஒருவர் இஸ்லாத்தை ஏற்றவராகக் காணப்பட்டால் அவர் குறித்த குடும்பத்தவர்களால் ஒதுக்கப்படல், தமது பெயர்கள் இஸ்லாமியப் பெயர்களாக மாற்றப்பட்ட போதிலும் அவர்களது இஸ்லாமல்லாத பெயர்களால் அழைக்கப்படல், சமூகத்தில் அவர்கள் ‘மவ்லா இஸ்லாம்’ எனும் பெயர்கொண்டு அழைக்கப்படல், பொது இடங்களில் ஏற்றத்தாழ்வுடன் நோக்கப்படல், அவர்களது பிள்ளைகள் சமூகத்தில் ஒதுக்கப்படல், பாடசாலைகள் மற்றும் இஸ்லாமியப் கல்விக்கூடங்களிலும், குர்ஆன் மத்ரசாக்களிலும் பிறப்பு முஸ்லிம் பிள்ளைகளால் தீண்டாமைசார் பதப்பிரயோகங்களால் இம்சிக்கப்படல், த.்.வாப் பணிகளின் போது அவர்களது கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படாமை, இளைஞனோ, யுவதியோ இஸ்லாத்தை ஏற்றால் அவர்களை திருமணம் செய்ய பிறப்பு முஸ்லிம்கள் பின்வாங்குதல் போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் தாம் தனிமைப்படுத்தப்படுவதாக உணர்ந்து சில மானசீகப் பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்து வருகிறனர். மற்றும் ஸகாத் பெறுவோர் வரிசையில் ‘முஅல்லபதுல் குலூப் (உள்ளம் ஈர்க்கப்பட்டோர்)’ குழுவினர் பெறுகின்ற அந்தஸ்தை வழங்காது விடுகின்றனர். இஸ்லாமிய வகுப்பறைகள்

திட்டமிடப்பட்ட முறைப்படி நடைபெறாமை, த.ஃவா வகுப்பறைகளில் அடிப்படை அம்சங்களுக்கு முக்கியத்துவமளிக்கப்படாமை, இஸ்லாத்தை ஏற்றோரின் அறிவு மட்டத்திற்கு ஏற்ப இஸ்லாம் போதிக்கப்படாமை போன்ற பல பிரச்சினைகளுக்கும் இவர்கள் முகம் கொடுத்து வருகின்றனர். மேற்படி பின்புலத்தில் இவ்வாய்வு, இலங்கையில் அனுராதபுர மாவட்டத்தை மையப்படுத்தி, இஸ்லாத்தை ஏற்றோர் எதிர்நோக்கும் சமய, சமூக, பொருளாதார ரீதியான பிரச்சினைகளைக் கண்டறிந்து வகைப்படுத்தும் பிரதான நோக்கத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

### 3. ஆய்வு முறையியல்

அனுராதபுர மாவட்டத்தில் 114 முஸ்லிம் கிராமங்கள் காணப்படுகின்றன. இம்மாவட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றோர்இறுதி 05 (2013-2017) வருடங்களில் 325 நபர்கள் காணப்படுகின்றனர். அனுராதபுர நகரம், நாச்சியாதீவு, நொச்சியாகம, கஹடகஸ்திகிலிய, ஹொரொவப்பதான, கெகிராவ போன்ற பிரதேசங்களில் பெரும்பான்மை இனத்தவரோடு முஸ்லிம்கள் கலந்து வாழ்வதனால் சிலர் இஸ்லாத்தை ஏற்றுள்ளனர். அத்தோடு இக்கிரிகொல்லாவ, மதவாச்சி, மிகிந்தலை போன்ற பிரதேசங்களில் இடம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்வதால் அப்பிரதேசங்களில் தமிழர்கள் சிலரும் இஸ்லாத்தை ஏற்றுள்ளனர். அனுராதபுர மாவட்டத்தில் மேற்படி இஸ்லாத்தைத் தழுவியோா் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்த வருகின்றனர் என்பது அறிந்ததே.

மேற்படி இஸ்லாத்தை ஏற்றோரது பிரச்சினைகளைக் கண்டறியும் நோக்கில் அனுராதபுர மாவட்டத்தில் காணப்படும் முஸ்லிம் கிராமங்களில் வாழும் இஸ்லாத்தைத் தழுவிய 64 (20%) பேர் நேர்காணலுக்காக எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்டனர். அரைக்கட்டமைக்கப்பட்ட நேர்காணல் முறை இவ்வாய்வில் பின்பற்றப்பட்டுள்ளதோடு இவ்வாய்வு பண்புசார் தகவல்களை கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறேமாவட்டத்தில் அமைந்துள்ள பிரதான ஜும்ஆ பள்ளிவாயல்கள், காழி நீதிமன்றம், இணக்க சபை, ஸகாத் நிதியம் ஆகிய நிறுவனங்களிலிருந்தும் நேர்காணல் மூலமும் மற்றும் இரண்டாம் நிலைத்த தரவுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. நேர்காணல் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் கைம்முறை (Coding Manually) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறுபேறுகள் கலந்துரையாடப்படுகின்றன.

#### 3.1 பங்கேற்பாளர்களின் தொகை விபரங்கள்

இத்தலைப்பில் அனுராதபுர மாவட்டத்தில் இஸ்லாத்தைத் தழுவியோரின் தொகை விபரங்கள், வயது, பால், கல்வித் தகைமை, தொழில் மற்றும் சமயம் ஆகியன பற்றிய புள்ளிவிபரங்கள் முன்வைக்கப்படுகின்றன. மேற்படி பிரதேசத்தில் இஸ்லாத்தைத் தழுவியோர் இஸ்லாத்தைத் தழுவியமைக்கான பிரதான காரணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படுகின்றன.

#### 3.1.1 வயது ரீதியான பிரதிநிதித்துவம்

தகவல் தருனர்களின் பால் ரீதியான பிரதிநிதித்துவம் ஆண்கள் 28 பேர் (40.6%) ஆகவும் பெண்கள் 38 பேர் (59.3%) ஆகவும் காணப்படுகின்றது. அனுராதபுர மாவட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றோர்களில் ஆண்களை விட பெண்கள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கமைய தகவல் தருனர்களின் எண்ணிக்கையை பின்வரும் அட்டவணை சுட்டிக் காட்டுகின்றது.

அட்டவணை 01: வயது ரீதியான பிரதிநிதித்துவம்

| வயது | தொகை | வீதம் % |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 20 – 30 | 28 | 43.75% |
| 31 – 40 | 22 | 34.37% |
| 41 – 50 | 04 | 6.25% |
| 50 மேல் | 10 | 15.62% |
| **மொத்தம்** | **64** | **100%** |

**மூலம்: களத் தகவல்கள் - 2017**

தகவல் தருனர்களில் பெரும்பான்மையானோர் 20 – 30 வயதுக்கு உட்பட்டவர்களே அதிகமாக இஸ்லாத்தைத் தழுவியுள்ளனர். இவர்கள் 43.75% ஆகக் காணப்படுகின்றனர். அவற்றுள் 31 – 40 இடைப்பட்ட வயதினர் 34.37% ஆக அமைய, 41 – 50 இடைப்பட்டவர்கள் 6.25% ஆகக் காணப்படுகின்றனர். 50 வயதிற்கும் மேற்பட்டவர்களாகக் கணிக்கப்படும் 15.62% வீதத்தினர் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியவர்களா எனக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு அவர்களிடத்தில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளன.

**4.1.2 கல்வித் தகைமை**

கல்வித் தகைமை அடிப்படையில் நோக்குகையில் பங்குபற்றுனர்களுல் 48.43% இரண்டாம் நிலைக் கல்வியைப் பெற்றவர்களாக்காணப்படுகின்றனர். ஆரம்பக் கல்வி மற்றும் தொழிற் தகைமைக் கல்வியைப் பெற்றவர்கள் முறையே 37.5% மற்றும் 14.06% காணப்படுகின்றமை சுட்டிக் காட்டத்தக்கது.

அட்டவணை 02: கல்வித் தகைமை அடிப்படையில் பிரதிநிதித்துவம்

| **கல்வித் தகைமை** | **தொகை** | **வீதம்** |
|---|---|---|
| ஆரம்பக் கல்வி | 24 | 37.5% |
| இரண்டாம் நிலைக் கல்வி | 31 | 48.43% |
| தொழிற்தகைமைக் கல்வி | 09 | 14.06% |
| **மொத்தம்** | **64** | **100** |

**மூலம்: களத் தகவல்கள் - 2017**

**4.1.3 தொழில்**

தகவல் தருனர்களை தொழில் ரீதியாக பாகுபடுத்தி நோக்கும் போது,இஸ்லாத்தை ஏற்றோரில் அதிகமானோர் வியாபாரம் செய்பவர்களாகக் (51.56%) காணப்படுகின்றனர். தொழில் வாய்ப்பறோர் 39.06% ஆகக் காணப்படுகின்றனர். இஸ்லாத்தை ஏற்றவர்களில் நாளாந்த கூலி வேலை செய்பவர்களும், விவசாயம் செய்பவர்களும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். அதாவது கூலித்தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபடுவோர் முறையே 3.12% மற்றும் 6.25% காணப்படுகின்றனர். குறிப்பாக,முஸ்லிமல்லாத வியாபாரிகள் முஸ்லிம்களுடன் தொடர்பு கொள்ளும் போது அவர்களின் நம்பிக்கை, நாணயம், நற்பண்பு போன்றவற்றை அவதானித்து இஸ்லாம் மார்க்கத்தின் புனிதத்துவத்தை உணர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. மேலும், வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் முறைகளிலும் முஸ்லிம்களின் நடைமுறைகளில் அவர்களுக்கு நம்பிக்கை

ஏற்பட வழி வகுத்தது. விசேடமாக முஸ்லிம் முதலாலிமார்களுக்குக் கீழ் தொழில் புரியும் போது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றோரது சம்பளம் மட்டுமன்றி அவர்களது வாழ்க்கை நிலை பற்றியும் கவனம் செலுத்தும் போதும் இஸ்லாம் மார்க்கம் பற்றிய நல்லெண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது.

#### 4.1.4 இஸ்லாத்தைத் தழுவியமைக்கான காரணங்கள்

பெறுபேறுகளின் படி, இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியமைக்கான காரணங்களை நோக்கும் போது,திருமண நோக்கத்திற்காக பங்குபற்றுனர்களுல் பெரும்பாலானவர்கள் (57.81%) இஸ்லாத்தைத் தழுவியுள்ளனர். பெரும்பாலானவை பெற்றோரின் சம்மதமின்றி ஏற்பட்ட காதல் தொடர்புகள் காரணமாக நிகழ்ந்த திருமணங்கள் ஆகும்.முஸ்லிம் நாடுகளுக்கு வேலை வாய்ப்புகாகச் சென்ற இடத்தில் இஸ்லாத்தின் பால் கவரப்பட்டு இஸ்லாத்தைத் தழுவியோர் 20.31% காணப்படுகின்றனர். அத்தோடு அயலவர்கள் முஸ்லிம்களாக இருக்கும் காரணத்தினால்குறித்த சூழலை அவதானித்து இஸ்லாத்தைத் தழுவியோர் 12.5% ஆகவும், வேலைத்தளத்தில் முஸ்லிம்களோடு இணைந்து செயற்பட்டதன் காரணமாகவும், அவர்களோடு பொருளாதார ரீதியாக ஏற்பட்ட தொடர்புகள் மூலமமும், முஸ்லிம்களின் நந்நடத்தையை அவதானித்தும் இஸ்லாத்தைத் தழுவியோர் 9.37% காணப்படுகின்றனர்.

அட்டவணை 03: பிறப்புச் சமயம்

| மதம் | தொகை | வீதம் |
|---|---|---|
| பௌத்தம் | 36 | 56.25% |
| இந்து | 20 | 31.25% |
| கிறிஸ்தவம் | 08 | 12.5% |
| **மொத்தம்** | **64** | **100%** |

மூலம்: களத் தகவல்கள் - 2017

அனுராதபுர மாவட்டத்தில் பெரும்பான்மை இனமாக பௌத்தர்கள் வாழும் பிரதேசம் என்ற வகையில் ஐந்து வருடத்திற்குள் புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோருல் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் கணிசமான அளவினராகக் காணப்படுகின்றனர். அவர்கள் 36 பேர் என்ற வகையில் 56.25% வீதத்தினர் காணப்படுகின்றனர். இந்து மதத்தினர் 20 பேரும் (31.25%), கிறிஸ்தவர்கள் 08 பேரும் (12.5%)முஸ்லிமல்லாதோராக இருந்து இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுல் பலரின் அன்றாட வாழ்க்கையில் குறிப்பிடத்தக்களவு இஸ்லாமிய நடைமுறைகளை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இஸ்லாத்தைத் தழுவியதன் பின்னர்பிறப்பு முஸ்லிம்களோடு இணைந்து இஸ்லாமியச் சூழலில் வாழந்து வந்ததமை இதற்கு காரணமாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. மேலும் அவர்களுல் சிலரடம்அதியுயர் மாற்றங்களையும் அவதானிக் கூடியதாக இருந்தமை - அதாவது பிறப்பு முஸ்லிம்களை விட - வரகோணக்கூடியதாகவுள்ளது.

### 4.2 பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

அனுராதபுர மாவட்டத்தில் இஸ்லாத்தைத் தழுவியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு அவற்றைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகள் இத்தலைப்பில் கலந்துரையாடப்பட்டுகின்றன். இஸ்லாத்தை ஏற்றோர் எதிர் நோக்கும் சமய, சமூக மற்றும் பொருளாதார ரீதியான பிரச்சினைகள் கண்டறியப்பட்டு இத்தலைப்பில் விளக்கப்படுகின்றன. இதன் மூலம் ஆய்வின் நோக்கங்கள் எய்தப்பட்டுள்ளன.

சமூக ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகளில் குடும்பத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படல், தம்பதிகளுக்கிடையில் முரண்பாடு, விவாகரத்து ஏற்படல்,திருமண ரீதியாக ஒதுக்கப்படல், மொழிப் பாகுபாடு பார்த்தல், உளவியல் ரீதியாக பாதிக்கப்படல், முஸ்லிம் ஆடை அணிவதற்கு சங்கடப்படல்ஆகிய பிரச்சினைகள் தரவுகளின் படி கண்டறியப்பட்டுள்ளன.

பொருளாதார ரீதியான பிரச்சினைகளாக, ஸகாத் கிடைக்கப்பெறாமை (4.64%),போதிய வருமானமின்மை (7.42%),பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க வசதியின்மை (4.29%) ஆகிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாக தரவுகள் குறிப்பிடுகின்றன.

**4.2.1 சமய ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகள்**

அனுராதபுர மாவட்டத்தில்இஸ்லாத்தை ஏற்றோர் எதிர் நோக்கும் பிரச்சினைகள் இவ்வாய்வின் நோக்கங்களுக்கு அமைய வகைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் சமய ரீதியாக,இஸ்லாமிய அறிவைப் பெறுவதில் தடை ஏற்படல், அல்குர்ஆனைக் கற்றுக் கொள்வதில் சிரமம், பிள்ளைகளை இஸ்லாமிய முறைப்படிவளர்ப்பதில் தடை, இஸ்லாமிய அடிப்படை விடயங்களில் தெளிவின்மை,முஸ்லிமாகப் பெயர் மாற்றம் செய்துகொள்வதில் சிரமம்,முஸ்லிம் அடையாளத்தை வெளிப்படுததுவதற்கு சங்கடப்படல்ஆகிய பிரச்சினைகள் காணப்படுகின்றன.

**4.2.1.1 இஸ்லாமிய அறிவைப் பெறுவதில் தடை ஏற்படல்**

நேர்காணல் பெறுபேறுகளின் படி,ஆய்வுப் பிரதேசத்தில் இஸ்லாத்தைத் தழுவியோரில் 75%இஸ்லாம் பற்றிய போதிய அறிவைப் பெறாதவர்களாகவும் அது பற்றி கவனக்குறைவுடையவர்களாகவும் காணப்படுனர். பங்குபற்றுனர்களுல் சிலர் (Participants) இஸ்லாத்தைப் புரிந்துகொண்டோ, இஸ்லாத்தின் மீதுள்ள கவர்ச்சியனாலோ அல்லாது திருமண நோக்கத்திற்காக இஸ்லாத்தைத் தழுவியுள்ளனர். அதனால் இவவாறான நிலை தோன்றியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.இஸ்லாமிய முறைப்படி தமது அன்றாட வாழ்வை கொண்டு செல்ல வேண்டும் என்பதில் போதிய உணர்வு அவர்களிடம் காணப்படுவதில்லை.சுமார் 11% பங்குபற்றுனர்கள்மட்டுமே இஸ்லாமிய அறிவைப் பெற்றுக்கொள்வதில் தடைகளை எதிர்நோக்குகின்றனர். அத்தோடு இஸ்லாத்துடன் இணைந்து வாழ்வது ஒரு முஸ்லிமின் குறிக்கோள் என்பதை உணர்த்துவதற்கான திட்டங்கள் அங்கு அமுலில் இல்லை. பிறப்பு முஸ்லிம்கள்இதனை ஏற்பாடு செய்து தரவில்லை என அவர்கள் மீது தப்பபிப்ராயமும் எழுந்துள்ளது.பங்குபற்றுனர் ஒருவரின் பின்வரும் கூற்று மேற்படி கருத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

> ‘‘இஸ்லாத்தைப் பற்றி அறிந்து கொள்ள எமக்கு வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. அதனை விளங்கிக் கொள்ள அதிக ஆவல் உள்ளது. எனினும் அதனைப் புரியவைக்க எவருமில்லை.’’

இஸ்லாத்தைப் பின்பற்றி ஒழுகுவதற்கான அறிவைப் பெற்றுக்கொள்ளககூடியவகையிலான இஸ்லாமிய வகுப்புக்கள் ஒழுங்குபடுத்தப்படுவதனை விருப்பம் வரவேற்கும் சூழல் அங்கு காணப்படுகிறது. அவ்வப் பிரதேச பள்ளிவாயல்களில் முஸ்லிமல்லாதோர் இஸ்லாத்திற்குள் நுழையவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகின்றனர். இஸ்லாம் மார்க்கத்தை தழுவுவோர் அனைவருக்கும் அல்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்புக்கள் கைகளில் வழங்கப்படுகின்றன. எனினும் இஸ்லாத்தைத் தழுவியோருள் பெரும்பாலானோர் சிங்களத்தை தம் தாய்மொழியாகக் கொண்டவர்கள்.சிங்கள

மொழிமூல குர்ஆன் தர்ஜமா கிடைக்கப்பெறாமை அல் குர்ஆனைக் கற்றுப் புரிந்துகொள்ள ஆவலோடு இருந்தும் அதைப் பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்படுகின்றது.

இஸ்லாத்திற்குள் நுழைந்த மனிதனுக்கு இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களான தௌஹீத், ரிஸாலத், இபாதாத் கோட்பாடுகள் மற்றும் இஸ்லாமானது ஏனைய சமயங்களிலிருந்து வேறுபடும் பாங்கு என்பன போதிக்கப்பட வேண்டும். இஸ்லாத்தின் தூய நோக்கங்கள், பல தெய்வக் கொள்கை இஸ்லாத்தில் இல்லாதிருப்பதற்கான காரணம் பற்றியும் அவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும். இஸ்லாத்தின் உண்மைத் தன்மை அவர்களின் உள்ளங்களில் ஊட்டப்படுவதன் மூலமே அவர்களின் செயல்களில் அவை பிரதிபளிக்கக்கூடியனவாக இருக்கும். அவர்களின் உள்ளங்களில் எழக்கூடிய சந்தேகங்களை வரவேற்கவும் அதற்குத் தகுந்த தெளிவுகளைப் பெற்றுக் கொடுக்கவும் ஆவணசெய்ய வேண்டும்.

#### 4.2.1.2 அல்குர்ஆனைக் கற்றுக் கொள்வதில் சிரமம்

அல்குர்ஆனைக் கற்றுக் கொள்வதில் 7.8% பங்குபற்றுனர்கள ஏதோவொரு வகையில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் ஒன்றான தொழுகையை நிறைவேற்ற அல்குர்ஆனில் சில அத்தியாயங்களை மனனம் செய்திருக்க வேண்டியது கடமையாகும். மனனம் செய்துகொள்கின்ற வரை சூராக்களை பார்த்து ஓதுவதற்கும் இஸ்லாம் அனுமதி வழங்கியுள்ளது. அல்குர்ஆனின் முக்கியத்துவம் பற்றி இஸ்லாத்தை ஏற்றவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றமையும் அவதானிக்கத்தக்கதாக இருந்தது. இப்பிரதேசத்திலுள்ள இஸ்லாத்தைத் தழுவிய பெண்கள் பெரும்பாலும் வீட்டில் இருப்பதாலும், ஆண்கள் காலையில் வேலைக்குச் சென்று மாலை நேரத்தில் வீடு திரும்புவதாலும் தம் மனைவியருக்கு அல்குர்ஆன் அத்தியாயங்களை மனனம் செய்வதற்கு உதவியாக நிற்பதில்தடை ஏற்படுகின்றது. மேலும்,இஸ்லாம் தொடர்பான விளக்கங்களைப் பெற அல்லது அல்குர்ஆனைக் கற்றுக்கொள்வதற்கு வேறுசிலரை நாடுவதற்கு வெட்கப்படும் நிலையும் ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகிறது.

#### 4.2.1.3 இஸ்லாமிய அடிப்படை விடயங்களில் தெளிவின்மை

இஸ்லாமிய அடிப்படை விடயங்களில் தெளிவின்மை உள்ளதாக 3.90%பங்குபற்றுனர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். பௌத்தம் மற்றும் இந்து மதங்களிலிருந்து இஸ்லாத்தைத் தழுவியோர்பலதெய்வ வழிபாடுடையவர்களாகக் காணப்பட்டதனால் திடீரென ஓரிறைக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டுகின்றனர். அல்லாஹ் ஏன் ஒருவனாக இருக்க வேண்டும், நபி ஏன் கடவுளாக இருக்க முடியாது, சூரியன் கடவுளின் படைப்பு என்றால் ஏன் அதனை வணங்க முடியாது போன்ற நம்பிக்கையோடு சார்ந்த அம்சங்களில் தெளிவற்றவர்களாகக் காணப்படுகின்றனர். பின்வரும் பங்குபற்றுனர் ஒருவரின் கூற்றும் இவ்விடயத்தில் அவதானிக்கத்தக்கது.

> ‘‘வருடத்திற்கு 30 நாட்கள் நோன்பு பிடிப்பது ஏழைகளின் பசி அறியவே. எனவே, ஒரு தடவை ஏழைகளின் பசியை உணர்ந்தால் போதும். ஒவ்வொரு வருடமும் 30 நாட்கள் நோன்பு நோற்க கடினமாக உள்ளது.’’

பொதுவாக நோன்பு பற்றியபெரும்பாலானவர்களின் நம்பிக்கை மேற்போன்ற கருத்துக்கு ஒப்பானதாக காணப்படுகிறது.இது தொடர்பான தெளிவை இஸ்லாத்தை ஏற்றோர்க்கு வழங்க முஸ்லிம் தம்பதி தவறியுள்ளமை இங்கு அவதானிக்கத்தக்கது.இது இஸ்லாத்தைத் தழுவியோர் மத்தியில் இதுவோர் பெரும் பிரச்சினையாக அமைந்துள்ளமை உணர்ந்துகொள்ளத்தக்கது.

### 4.2.1.4 பிள்ளைகளை இஸ்லாமிய முறைப்படி வளர்ப்பதில் தடை

அனுராதபுர மாவட்டத்தில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக இஸ்லாத்தை ஏற்றுள்ளனர் என்பது தகவல்கள் ஊடாக கண்டறியப்பட்ட விடயமாகும். பிள்ளைகளை இஸ்லாமிய முறைப்படி வளர்ப்பதில் பல்வேறு தடைகள் காணப்படுவதாக 8.59% பங்குபற்றுனர்கள் கருதுகின்றனர். எனினும்பௌத்த மதத்திலிருந்து இஸ்லாத்தை தழுவிய பெரும்பாலான பெண்கள் இஸ்லாத்தில் தெளிவின்மை காரணமாக தம் முன்னைய சமயத்தின் படி குழந்தைகளை வளர்த்து வருகின்றனர். தாம் சொந்த மார்க்கத்தைத் துறந்து இஸ்லாத்தினுள் நுழைந்து கொண்ட போதிலும் தம் முன்னைய கலாசாரம், மொழி மற்றும் பழக்கவழக்கங்களிலிருந்து விடுபடாமையாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது. பங்குபற்றுனர்களுல் பெரும்பாலானோர் தமது பிள்ளைகளை சிங்கள மொழி மூல பாடசாலைகளுக்கு அனுப்பும் நிலைமை காணப்படுகிறது. இஸ்லாத்தைத் தழுவியவர்கள் இஸ்லாமிய முறையில் ஒழுகுகின்ற போதுதான் அது அவர்களது பிள்ளைகளிலும் தாக்கம் செலுத்த வாய்ப்பேற்படுத்தும். எனவே, இஸ்லாத்தை எற்ற தாய்மார்களுக்கு இது பற்றிய அறிவு வழங்கப்பட வேண்டியது அவசியமாகும்.

### 4.2.1.5 முஸ்லிமாகப் பெயர் மாற்றம் செய்துகொள்வதில் சிரமம்

சுமார் 90% பங்குபற்றுனர்கள் தம் பெயர்களை முஸ்லிமாக மாற்றிக் கொள்வதில் ஏரோ ஒரு வகையில் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். அத்தோடு மிகவும் சிரமத்திற்கு மத்தியில்பெற்றோர் தமது பெயர்களை முஸ்லிமாக மாற்றிக் கொண்டாலும் தமது பிள்ளைகளின் பெயர்களை இது வரை மாற்றிக்கொள்ள இயலாது பல வருடங்கள் முஸ்லிமல்லாத பெயரிலேயே அழைக்கப்பட்டு வருவதும் அவதானிக்கத்தக்கது. தாம் பிறப்பில் முஸ்லிமல்லாதிருந்து பின்னர் அதனைத் தழுவினோம் என தம்மை அடையாளப்படுத்துவதில் இஸ்லாத்தைத் தழுவியோர் சங்கடம் காட்டுகின்றனர். இதனை இரகசியமாகப் பேணுவதில் கவனமாக உள்ளனர். இதனைத் தெரிந்துகொண்டால் பிறப்பு முஸ்லிம்கள் தம்மை இழிவானவர்களாக கருதிவிடுவார்கள் என்ற அச்சமும் அவர்களுடைய உள்ளத்தில் அடிக்கடி எழுகின்றன.குறித்த ஒருவரது பிள்ளை சுமார் 14 வருடங்களாக பௌத்த பெயரில் அரபு மத்ரசாவில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார். மற்றொருவர் 10 வருடங்கள் தன் பெயரை முஸ்லிம் பெயராக மாற்றிக்கொள்ளாது வாழ்ந்து வருகிறார்.புதிதாக பிறப்புச் சான்றிதழைத் தயார் செய்துகொள்வதற்காக பங்குபற்றுனர்களுல் பலர் பல வருடங்கள் நேரத்தைச் செலவலித்தும் வருகின்றனர். மாவட்டத்தில் குறித்த சில பிரதேச பள்ளிவாயல் நிர்வாக சபைகள்இஸ்லாத்தை ஏற்றோரின் பெயர் மாற்றம் தொடர்பான விடயங்களுக்கு உதவுவதற்கு பின்வாங்குகின்றனர். இதனால் பள்ளிவாயல் நிருவாகத்தை குறை கூறக் கூடிய நிலையும் உருவாகியுள்ளது. இவ்வாய்விற்காக கண்டறியக்கிடைத்தது.

### 4.2.1.6 முஸ்லிம் அடையாளத்தை வெளிப்படுததுவதில் சங்கடம்

இஸ்லாத்தை ஏற்றோரில் 40% மேற்படி எண்ணத்திற்கு ஆளாகியுள்ளனர். அவர்கள் வெளியில் செல்லாமலும், தான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஒரு முஸ்லிம் எனும் அடையாளத்தை வெளிப்படுத்த தயக்கம் காட்டுபவர்களாகவும் காணப்படுகின்றனர். தமது பிள்ளைகள் பிறப்பு முஸ்லிம் பிள்ளைகளுடன் கலக்கின்ற போது இஸ்லாத்தை ஏற்றவர் என்று தெரியவருதல் தமக்கு கௌரவக் குறைவை ஏற்படுத்தும் என கருதுகின்றனர். தமது அடையாளம் வெளிப்படுகின்ற போது சமூகத்தினால் புறக்கணிக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்ச உணர்வும் மனச் சங்கடமும் பங்குபற்றுனர்கள் பெரும்பாலானவர்களிடம் காணப்படுகிறது. மேற்படி பாதிப்புக்கள் யாவும் இந்த பிறப்பு முஸ்லிம்களால் ஏற்படுகின்றது என்பதை உணர்ந்த இவர்கள் அவர்ளுடன் சினமுற்றவர்களாக காணப்படுவதோடு

வாழ்க்கையில் விரக்தி, வெறுப்பு, பகையுணர்வு போன்ற உளவியல் நோய்களுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர்.

#### 4.2.2 சமூக ரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

ஆய்வுப் பிரதேசத்தில் இஸ்லாத்தைத் தழுவியோர்சமூக ரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இத்தலைப்பில் கலந்துரையாடப்படுகின்றன. திருமண ரீதியாக வேறுபாடு காட்டப்படல்,குடும்பத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படல், மொழிப் பாகுபாடு பார்த்தல், இழிவு மனப்பான்மை, கலாசால ஆடை முறை,தம்பதியினருக்கிடையில் முரண்பாடு ஏற்படல், விவாகரத்து ஏற்படல்,ஆகியவை இவற்றுள் உள்ளடங்களாகும்.

#### 4.2.2.1 திருமண ரீதியாக வேறுபாடு காட்டப்படல்

இஸ்லாம் திருமணத்தை தூண்டுகின்ற அதே வேளை அதற்கான ஒழுங்கு முறைகளையும் நிபந்தனைகளையும் பற்றித் தெளிவான குறிப்பிடுகின்றது. திருமணம் ஓர் இபாதத் என்ற வகையில் நீண்ட நிறைவான நிம்மதியான குடும்ப வாழ்வு அமைவதற்கு இவ்விதிமுறைகள் கட்டாயம் பேணப்படல் வேண்டும். நிறம், மதம், கோத்திர வேறுபாட்டிற்காக திருமணம் முடிக்காமலிருப்பபதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. பங்குபற்றுனர்களுல் 20-30 வயதுக்குஇடைப்பட்டவர்கள் அதிகமாக காணப்படுகின்றனர். ஒரு சில குடும்பங்கள் இஸ்லாத்தைத் தழுவிய 30 வருடங்களுக்கு மேலாகி அவர்கள் பிறப்பு முஸ்லிம்களன்றி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் என்பதறகான அடையாளங்களும் அழிந்து போயுள்ளன.வணக்க வழிபாடுகளிலும்மிக அதிகமாக ஈடுபட்டிருக்கின்றனர்.இருந்த போதிலும் அவர்கள் பிறப்பு முஸ்லிம்களன்றி இஸ்லாத்தைத் தழுவிய முஸ்லிம்கள் என்பதை ஏதோ ஒரு வழியில் தெரிந்து வைத்துக்கொண்டுஅக்காரணத்திற்காக அக்குடும்பத்திலுள்ள திருமண வயதுடைய பெண்களை திருமணம் செய்துகொள்ள பிறப்பு முஸ்லிம்கள் முன்வருவதில்லை.அவர்களில் குறிப்பிடத்தக்க சிலர் திருமணம் செய்வதற்கு போதிய பண வசதி அற்றோராகவும், அதனால் அவர்களது திருமணப் பேச்சு குழைந்து போயுள்ளமையும் மற்றொரு பிரச்சினையாகும். பிறப்பு முஸ்லிம்களது இம்மனோபாவம்தொடர்ந்து வரும் காலங்களில் இஸ்லாத்தைத் தழுவக் கூடியவர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என்பது உறுதி.

#### 4.2.2.2 குடும்பத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படல்

இஸ்லாத்தைத் தழுவியோர்களில் 75% மேற்படி பிரச்சினைக்கு முகங்கொடுக்கின்றனர். தாம் பின்பற்றும் சமயத்திலிருந்து பிரிதொரு சமயத்தைத் தழுவுவதென்றால் குடும்பத்தவர் மற்றும் சுற்றச் சூழலில் உள்ளோர் பொதுவாக விருப்பம் தெரிவிக்காது இருப்பது வழமையாகும். மேற்படி பங்குபற்றுனர்களில் 65% இன்று வரை தான் பிறந்த வீட்டிலிருந்து ஒதுக்கப்பட்டு தொடர்புமின்றி வாழ்ந்து வருகின்றனர். திருமணம் முடிக்கும் நோக்கில் இஸ்லாத்தை ஏற்றவர்கள் பெற்றோரின் சம்மதமின்றி திருமணம் செய்துகொண்டுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது. பிறப்பு முஸ்லிம்களி முஸ்லிமல்லாதோரை இஸ்லாத்தை ஏற்கச் செய்து திருமணம் செய்துகொள்வதன் மூலம் சமூகத்தில்தமது குடும்பத்தின் கௌரவம் பரிக்கப்படுவதாக உணர்கின்றனர். இதனால்குடும்பத்தின் முன்அனுமதியின்றி திருமணம் செய்து கொண்ட தம்பதிகள்பல சந்தர்ப்பங்களில் தம் குடும்பத்தினரால் இணைத்துக்கொள்ளாது துறத்தப்படுதல்,இருவரையும் பிரித்து விடுதல் ஆகிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர். மற்றும் சில சந்தர்ப்பங்களில் முஸ்லிமல்லாத சிலர் இஸ்லாம் மார்க்கத்தைப் புரிந்து அதனை ஏற்றுக் கொண்டு பின்னர் தம் குடும்பத்தாரிடம் செய்தியை எத்திவைக்கின்ற போது

வீட்டார்கள் கோபமுற்று உடனடியாக அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றிய நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. பின்வரும் பங்குபற்றுனர் ஒருவரின் கூற்று இதனை தெளிவுபடுத்துகிறது.

''எங்கு இஸ்லாத்தை ஏற்றாயோ அங்கேயே திரும்பி செல்.''

வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளிலுக்குச் சென்று அங்கு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் மன தைரியத்துடன் தமது கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். எனினும் அவர்கள் தம் சொந்த பந்தங்களை இழந்த வருத்தத்துடன் தனிமை உணர்வுடன் வாழ்ந்து வருகின்றனர் என்பது அவதானத்திற்குரியது.குழந்தைப் பேறு போன்ற முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றும் தம் குடும்பத்தினர் அவர்களுடன் இணைவாரில்லை.இதற்கப்பால் குடும்பங்களில் அன்பு, அரவணைப்பு, விட்டுக் கொடுத்தல், புரிந்துணர்வு போன்ற அம்சங்கள் நீங்கப்பெற்று கோபம், பொறாமை, விரோதம்,பகைமை போன்ற பண்புகள்இஸ்லாத்தை ஏற்றோர் மீது அவர்களது குடும்ப அங்கத்தவர்களால் கட்டவிழ்த்து விடப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 4.2.2.3 மொழிப் பாகுபாடு பார்த்தல்

ஆய்வுப் பிரதேசத்தில் இஸ்லாத்தைத் தழுவியோர் அதிகமாக எதிர்நோக்கும் பிரச்சினையாக இது காணப்படுகின்றன. அனுராதபுர மாவட்டம் பௌத்த மதத்தையுடையோரைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ளது.இத்தகைய பெரும்பான்மைச் சமூகத்திலுள்ள சிலர் இஸ்லாத்தை ஏற்றுள்ளனர். கலப்பு திருமணங்கள் இடம்பெற்ற் குடும்பங்பளில் கணவன் வீட்டில் மனைவி அல்லது மனைவியின் வீட்டில் கணவன் தங்கி வாழ்ந்து வருகின்ற சந்தர்ப்பங்களில் அங்கு மொழி ஒரு பிரச்சினையாக எழுகின்றது. கணவனின் வீட்டாருக்கு அல்லது மனைவியின் வீட்டாருக்கு சிங்கள மொழி தெரியாத காரணத்தினால் பிரச்சினை எழுகின்றது. இதனால் வீட்டிற்கு வந்திருக்கும் மருமகள் அல்லது மருமகன் மீது வெறுப்புணர்ச்சியைவெளிக்காட்டக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது. இருவரில் ஒருவர் தனது மொழியினை விட்டுக் கொடுக்க வேண்டிய நிலையும்மற்றொரு மொழியியைக் கற்றுக் கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இங்கு மொழி ரீதியான சுதந்திரம் தடைப்பட்டு மொழிப் புறக்கணிப்பும் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் தம்பதிகளில் ஒருவர் வீட்டை விட்டு வெளியேறிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன. இவ்வாறே, சுற்றுச் சூழலில் உள்ளவர்கள் பிறப்பு முஸ்லிம்களாக இருப்பின் அவர்கள் தழிழ் மொழியில் பேசக்கூடியவர்களாகவும் இஸ்லாத்தைத் தழுவியவர் தமிழ் அல்லாத மொழி பேசக்கூடிவராகவும் இருப்பின் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது பிழையாகப் புரிந்து கொள்ளப்பட்டு கைகலப்பு ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

#### 4.2.2.4 இழிவு மனப்பான்மை

இஸ்லாத்தைத் தழுவியோர்களில் 70% இப்பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றனர். பிறப்பு முஸ்லிம்களாகவன்றி இஸ்லாத்தை ஏற்றவர்கள் என்பதனால் அவர்கள் தம்மை விடத் தாழ்ந்தவர்கள் என பிறப்பு முஸ்லிம்களால் நோக்கப்படுகின்றனர். ஆகவே, இவ்விரு தரப்பினருக்கும் இடையில் பெறும் கருத்து வேறுபாடு கூட இடம்பெற்று வருகின்றன. இஸ்லாத்தை ஏற்றவர்கள் என்ற காரணத்திற்காக அவர்களைத் திருமண வைபவங்கள், பொது ஒன்று கூடல்கள், விழாக்கள், சம்பிரதாயங்கள் போன்றவற்றிற்குஅழைக்கப்படாத சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படுகின்றன.ஆனால் அவர்களுல்சிலர் விசேட வைபவங்களின் போது பாத்திரங்கள் கழுவுவதற்காகவும், கழிவறை சுத்தம் செய்வதற்கும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளனர். மொத்தத்தில் பெரும்பாலானவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருவதை தகவல்கள் மூலம் உறுதிசெய்ய முடியும்.

#### 4.2.2.5 கலாசார ஆடை முறை

இஸ்லாத்தை ஏற்றோருள் 30% இஸ்லாமிய முறையில் ஆடை அணிவதை அசௌகரியமாக நோக்கும் நிலை காணப்படுகின்றது.பின்வரும் பங்குபற்றுனர் ஒருவரின் கூற்று கருத்திற்கொள்ளத்தக்கது.

> ‘‘இஸ்லாத்தில் ஏனைய கடமைகள் பற்றி உண்மையில் எனக்கு பூரண அறிவில்லை. இருந்த போதிலும், இஸ்லாமிய முறையில் ஆடை அணிவதில் நான் சங்கடப்படுகிறேன்.’’

இஸ்லாமிய கலாசார ஆடை முறையை (பெண்கள்: அபாயா, ஆண்கள்: ஜுப்பா மற்றும் தொப்பி) பங்குபற்றுனர்களில் பெரும்பாலானோர் அணிகின்ற அதே வேளை, சிலர் அதனை அணிவது அசௌகரியமாக உள்ளது எனக் கருதுகின்றனர். மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிந்துஅங்கு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு பின்னர் இலங்கை நாட்டுக்குத் திரும்பிய பெண்கள் பிறப்பு முஸ்லிம்கள் போல உடை அணிகின்றனர். இவர்களிடம்இவ்வுடை தொடர்பில் எதுவிதவெறுப்பும் ஏற்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், இஸ்லாத்தைத் தழுவிய இவர்கள் முஸ்லிம் நாடுகளுக்குவேலைவாய்பபுக்காக செல்லும் போது தமக்கு உயந்தளவில்மறியாதை கிடைக்கும் என நம்கின்றனர்.

#### 4.2.2.6 தம்பதியினருக்கிடையில் முரண்பாடு

பங்குபற்றுனர்களின் பெரும்பாலான குடும்பங்களில் கணவன், மனைவி ஆகிய இருவரும் குடும்ப வாழ்வு பற்றிய இஸ்லாமிய அறிவு இன்றி வாழ்ந்து வருகின்றனர்.கணவனுக்கும் மனைவிக்குமிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.தம்பதிகளில் ஒருவர் பிறப்பு முஸ்லிமாக இருந்தும் அவர் இஸ்லாமிய வழிமுறையை தனது வாழ்வில் பின்பற்றுவதில்லை.கணவனின் வீட்டார் இஸ்லாத்தை ஏற்ற அவரது மனைவியிடம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பழகுதல்,அவளின் குடும்பத்தாரை மதிக்காமை எனும் நிலை காணப்படுகின்றது. இதே நிலை இஸ்லாத்தை ஏற்ற கணவனுக்கும் ஏற்படுகின்றது. இதனால் குறித்த தம்பதியினருக்கிடையில் தம் குடும்பத்தாரின் தவறான நடத்தை சுட்டிக்காட்டப்பட்டு முறுகல் நிலை தோன்றுகிறது. இவ்வாறே,இஸ்லாத்தை நடைமுறைப்படுத்துவதில் இருவரில் ஒருவர் ஒத்துழைக்காமைஇம்முறுகலுக்கு காரணமாய் அமைகிறது. இல்லரம் நடாத்தத் தேவையான பக்குவம், முதிர்ச்சி என்பன காணப்படாத இஸ்லாத்தைத் தழுவிய இளம் தம்பதி (கணவன் அல்லது மனைவி)யினரிடத்திலும் மேற்படி முரண்பாடு ஏற்படுகின்றது.குடும்ப வாழ்வில் சவால்கள், பிரச்சினைகள் வருவது இயல்பானதாக இருப்பினும் இளவயதினர் அச்சவால்களை முறியடிக்க திறமையற்றவர்களாக விளங்குகின்றனர்.

கணவனோ மனைவியோ இஸ்லாமிய அடிப்படையிலான தத்தமது கடமைகளையும், உரிமைகளையும் நடைமுறைப்படுத்த முனைகின்ற போதும்அவர்களுக்கிடையில் முரண்பாடு எழுகின்றது. ஏனெனில் தம்பதியினரில் ஒருவர் இஸ்லாம் பற்றிய அறிவில் தெளிவற்றவராகக் காணப்படுவதோடு அதனை நடைமுறைப்படுத்த பின்வாங்கவும் செய்கிறார். இதனால் கணவன், மனைவிக்கிடையில் வாக்குவாதம் அதிகரித்து குடும்பப் பிணக்கு அதிகரிக்கக் காரணமாக அமைகிறது. இஸ்லாத்தை ஏற்றவர் பெண்ணாக இருப்பின் தனது கணவரின் நடத்தை திருமணத்திற்கு முன்பு இஸ்லாமிய முறையிலும் (உதாரணமாக ஐவேளை தொழக்கூடியவர்) திருமணத்திற்கு பின்பு அவ்வாறு கணவர் அதனைத்தொடர்ந்து பின்பற்ற தவறும் பட்சத்தில் அப்பெண் அதனை மீண்டும் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்து அதனை செயற்படுத்தாவிடில் தன் கணவனுடன் முரண்பட்டுக்கொள்கின்ற நிலையும் காணப்படுகின்றது.பிறப்பு முஸ்லிம் கணவன்மாரின் இஸ்லாமல்லா நடவடிக்கைகள் காரணமாக விவாகரத்துக்கள் இடம்பெற்றுள்ளன. மது அருந்துதல், ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றாதிருத்தல்,

நோன்பு நோற்காதிருத்தல் போன்ற தனது கணவரின் பிறழ்வான நடத்தை காரணமாக விவாகரத்துக்கள் இடம்பெற்றுள்ளன.இஸ்லாத்திற்குள் நுழைந்தோர்களில் 25% மாத்திரமே இஸ்லாத்தை குறிப்பிடத்தக்களவு முறையாகவும் நேர்த்தியுடனும் நடைமுறைப்படுத்துகின்றனர். எனினும் இருவரில் ஒருவர் பூரணமாக பின்பற்ற தவறுகின்ற சந்தர்ப்பத்திலும் தனது துணைவரால் அது பூரணமாகப் பின்பற்றப்பட வேண்டும், தனக்கும் அது புரிய வைக்கப்பட வேண்டும் எனும் எதிர்பார்ப்பு காணப்படுகின்ற நிலையும் அவதானிக்கத்தக்கது.

#### 4.2.3 பொருளாதார ரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

அனுராதபுர மாவட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றோர் பொருளாதார ரீதியாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அந்தவகையில் ஸகாத் கிடைக்கப்பெறாமை,போதிய வருமானமின்மை மற்றும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையை மேற்கொள்ள வசதியின்மை ஆகிய பிரச்சினைகள் இவற்றுள் உள்ளடங்குகின்றன.

#### 4.2.3.1 ஸகாத் கிடைக்கப்பெறாமை

புனித அல்குர்ஆனில் தொழுகையோடு வலியுறுத்திப் பேசுப்படும் விடயமாக ஸகாத் அமையப்பெற்றுள்ளது. ஸகாத் பெறத் தகுதியான எட்டு கூட்டத்தினர் வரிசையில் இஸ்லாத்தின் பால் உள்ளம் ஈர்க்கப்பட்டோர் (முஅல்லபதுல் குலூப்)ஒரு பிரிவினராவர்.பங்குபற்றுனர்களுல் சுமார் 70% மேற்படி குழுவில் உள்ளடங்கப்பட்டிருந்தும் அவர்கள் ஸகாத் பெற்றுக்கொள்வதில்லை. பங்குபற்றுனர் ஒருவரின் பின்வரும் கூற்று அவதானிக்கத்தக்கது.

> நாம் புதிதாக இஸ்லாத்தைத் தழுவினோம் என்றாலும் இது வரைக்கும் எமக்கு ஸகாத் அடிப்படையிலான பொருட்களோ, பணமோ கிடைக்கவில்லை.''

அனுராதபுர மாவட்ட ஸகாத் நிதியங்களினால் பிரதேசத்தில் காணப்படும் மேற்படி பிரிவினருக்கான ஸகாத் உதவிகிடைக்கப்பெறவில்லை என்பதும் பள்ளிவாயல்கள் இவ்விடயத்தில் கரிசனை காட்டவில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. தாமும் ஸகாத் உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனும் மிகுந்த ஆவலுடன் கூடிய எதிர்பார்ப்பு இஸ்லாத்தைத் தழுவியோரிடம் காணப்படுகின்றது.

#### 4.2.3.2 போதிய வருமானம் இன்மை

இஸ்லாத்தைத் தழுவியோரை அங்கத்தவராகக் கொண்ட பெரும்பாலான குடும்பங்களில் ஆண் அன்றாடம் கூலித் தொழில் செய்பவராக உள்ளார். இக்கூலித் தொழில் மூலம் நாளாந்தம் கிடைக்கும் வருமானத்தின் மூலம் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.கூலித் தொழிலுக்கான ஊதியம் வழங்குவதிலும் பிறப்பு முஸ்லிம்கள் பாரபட்சம் காட்டுகின்றனர். சாதாரண நாட்சம்பளம் ரூபா 1500 எனில், இஸ்லாத்தைஏற்ற ஒரு கூலித்தொழிலாளிக்கு ரூபா 1000 வழங்கப்படுகிறது. அன்றாட வாழ்க்கையை கொண்டு செலவதற்கு மேற்படிவருமானம் போதியதாக இல்லாதிருக்கின்ற போது ஏனைய தேவைகளான மருத்துவச் செலவு, பிள்ளைகளின் கல்விச் செலவு, பெருநாட்களுக்கான செலவீனங்கள்என்பவற்றிற்கு போதிய பணத்தை பெற்றுக்கொள்வதில் நெருக்கடிகளுக்கு ஆளாகின்றனர். குடும்பத்தில் கணவன், இஸ்லாத்தை ஏற்றதன் மனைவியின் செலவீனங்களை முழுமையாகப் பொறுப்பேற்று அவற்றை இஷ்டப்படுத்த வேண்டும் எனும் எண்ணத்தோடு செயற்படுவதையும் அவதானிக்கலாம். எனினும் அவனது வரவேற்கத்தக்க எண்ணத்தை அடைந்துகொள்ள போதிய வருமானமின்மை ஒரு பிரச்சினையாகக் அமைகிறது. மாற்றமாக மற்றொரு சந்தர்ப்பத்தில்போதிய வருமானமின்மை காரணமாக கணவன்

மனைவிக்கிடையில் பிணக்குகளும் ஏற்படுகின்றன.பங்குபற்றுனர் ஒருவரின் கூற்று இங்கு நோக்கத்தக்கது.

> ''கணவரை நம்பியும் இஸ்லாம் மார்க்கத்தை நம்பியும் இஸ்லாத்தைத் தழுவினால் உண்ணுவதற்கு கூட வழியற்ற நிலையில் நாம் இருக்கின்றோம். அவரது (கணவர்) உற்றார் உறவினர்களின் உதவி அற்ற நிலையில் வாழ்கின்றோம்.''

#### 4.2.3.3 பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையை மேற்கொள்ள வசதியின்மை

ஆய்வுப் பிரதேசத்தில் இணங்காணப்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகளில் ஒன்றாக இது அமைகிறது. இன்று சிறுவர் தொடக்கம் முதியோர் வரையில் கல்வி என்பது மிக இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. நவீன யுகத்தில் கல்வி அறிவின்றி குடும்பத்தை வழிநடத்திச் செல்வதோ, தனது பிள்ளைகளை கற்பித்து நெறிப்படுத்துவதோ, சமூகத்தவரோடு இணங்கி வாழ்வதோ சாத்தியமற்றதாக உள்ளது.வசதி குறைவாக உள்ளமையால் இஸ்லாத்தை தழுவியவர்களில் சுமார் 10 குடும்பத்தவர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமல் வீட்டில் உதவிக்காக வைத்துள்ளனர். பின்வரும் பங்குபற்றுனர் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது.

> ''பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு வசதியில்லை. இதனை ஊர் பள்ளி நிர்வாகத்திற்கு அறிவித்தும் அதற்கான எந்த சாதகமான நடவடிக்கைகளையும் அவர்கள் எடுக்கவில்லை.''

இஸ்லாத்தை ஏற்றதனால் தான் தாம் கஷ்டத்தில் வாழ்வதாகவும் இல்லையேல் தமது முஸ்லிமல்லாத உறவினர்களின் உதவியுடன் வசதியுடன் வாழ்ந்திருக்க முடியும் என அவர்களுல் சிலர் எண்ணுகின்றனர். முஸ்லிம் சமூகத்தவர் தமது கஷ்டங்களை அறிந்து உதவ வேண்டும் என்பது அவர்களது எதிர்பார்ப்பாகும். இதைவிட ஊரிலுள்ள முஸ்லிம்கள் தம்மீது பொறுப்பாளிகள் என எல்லை கடந்த நம்பிக்கையும் அவர்களிடம் காணப்படுகின்றன. ஏனைய பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லும் போது தமது பிள்ளைகள்பாடசாலைக்குச் செல்லாதிருப்பதையிட்டு மனம் வருந்தும் நிலையும் மேலோங்கிக் காணபப்டுகிறது.பின்வரும் பங்குபற்றுனர் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது.

> ''இஸ்லாத்திற்கு மதம் மாறியதால் தான் நான் இது போன்ற சிக்கல்களுக்கு முகம் கொடுக்கிறேன்.''

ஆகவே, இலங்கையின் அனுராதபுர மாவட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றோர்சமய,சமூக, பொருளாதார ரீதியாகபல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர் என்பது தகவல்கள் ஊடாக கண்டறியப்பட்டுள்ளன. பங்குபற்றுனர்களில் பெரும்பாலானோர் ஏதோவோர் பிரச்சினைக்கு முகம்கொடுக்கின்றனர் என்பது தெரிய வருகிறது.இத்தனை தூரத்திற்கு நெருக்கடிகளை சந்தித்தும் அவர்களில் எவரும் இஸ்லாத்தை விட்டு தம் முன்னையசமயத்திற்கு மாறிவிடவில்லை என்பது விசேட அம்சமாகும். நெருக்கடிகள் தொடர்பாக பொறுமை அவர்களிடம் மேலோங்கியிருக்கின்றமை அவதானிக்கத்தக்கது.

## 5. முடிவுரை

அனுராதபுர மாவட்டத்தில் இஸ்லாத்தைத் தழுவியவர்களில் கணிசமானோரிடம் போதியளவு இஸ்லாம் பற்றிய தெளிவு காணப்படுவதில்லை. இஸ்லாத்தைப் புரிந்து கொள்ள ஆர்வம் இருந்தும் அதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறுவதோ, ஏற்படுத்திக்கொடுக்கப்படுவதோ இல்லை. பெரும்பான்மை

சமூகத்திலிருந்து இஸ்லாத்தைத் தழுவியதால் அவர்கள் அல்குர்ஆனை விளங்கிக் கொள்வதிலும், இஸ்லாம் பற்றிய அடிப்படையைப் புரிந்துகொள்வதிலும் தம் பிள்ளைகளுக்கு இஸ்லாமிய அறிவைப் புகட்டவும் சிரமப்படுகின்றனர். இவ்வாறே இவர்கள் தமது முஸ்லிமல்லாத குடும்ப அங்கத்தவர்களால் ஒதுக்கபபடுவதோடு அவர்களைத் தப்பாகப் புரிந்துகொள்ளும் நிலையும் அவர்களுடன் தொடர்ந்து உறவுகளைப் பேண முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. அவற்றை சீர்செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுமில்லை. சில குடும்பங்களில் கணவன் மனைவிக்கிடையிலான (இஸ்லாத்தை ஏற்றவர்) முரண்பாடு அதன் உச்ச கட்டத்தை அடைந்து விவாகரத்துக் கோரி காதி நீதிமன்றம் வரை சென்றுள்ளது. இந்நிலை இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர் மீது முஸ்லிமல்லாத உறவினர்கள் பழிப்பை ஏற்படுத்த வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. இஸ்லாத்தை ஏற்றதனால்தான் இத்தகைய சீரழிவு ஏற்படுகிறது என முஸ்லிமல்லாதோர் தவறாகப் புரிந்துகொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. சுய விருப்பத்தின் பேரிலன்றி, முஸ்லிம்கள் தம் சமயத்தைப் பிரசாரம் செய்வதன் மூலமாகத்தான் முஸ்லிமல்லாத பலர் இஸ்லாத்தை ஏற்கிறார்கள் என்றும் முஸ்லிமல்லாதோர் புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதுவே சிலவேளை சாதாரண முஸ்லிம்கள் மீது பகைமை உணர்வு அதிகரிக்கவும் பழிவாங்கும் மனோநிலை உருவாகவும் காரணமாய் அமைந்து விட முடியும் என்பதும் நோக்கத்தக்கது. இஸ்லாத்தை ஏற்றோர் குடும்ப ரீதியாக ஒதுக்கப்படுவதன் காரணமாக தம் குடும்பத்திலிருந்து எந்த வகையான அநந்தரத்தையும் பெற்றுக்கொள்ளாமை அவர்களது வாழ்வில் பொருளாதார நெருக்கடி ஏற்பட காரணமாகவுள்ளது. ஆகவே, மேற்படி ஆய்வின் முடிவுகள் சர்வதேச மற்றும் தேசிய அரசு சாரா இஸ்லாமிய நிறுவனங்ளுக்கு இஸ்லாத்தை ஏற்றோர் தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளவும், பிரச்சினைகள் கவனத்திற்கொள்ளப்பட்டு அவை தீர்க்கப்படவும் துணையாய் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**References**


1. *'Let's Pray',* (1982).'The Muslim Converts Association of Singapore, Darul Arqam Singapore.
2. Alhassan abdul rahman, *'An Analysis Of The Challenges And Prospects Of Convert To Islam In The Greater Accra Region'* , M.Phil Religions Degree,University of Ghana, Legon Department for the study of religions. 2015.
3. Alhassan, Rashida, *'Social Challenges facing Muslim Reverts in the Ghanaian Community'*, M. Phil Thesis to the Department for the Study of Religions, University of Ghana, 2014.
4. Ali kose (1994). '*Conversion to Islam: a study of native British converts'* Doctoral Thesis, Doctor of Philosophy, King's College London.
5. Apau-Gyekye, Nana, '*The Contributions of the Ghana Muslim Mission to the Development of the Ghanaian Muslim Community',* M.Phil Thesis, Department for the Study of Religions, University of Ghana, 2010.
6. Ibraheem Mikail Abiola, Haruna Umar Farouq, and Maruf RajiOwoyemi (2016). ' *Historical Investigation to the Problems and Challenges of Muslims in Papua New Guinea' ,* International Journal of Culture and History, Vol. 2, No. 1
7. Ibrahim, Hussein Iddris, '*Preaching in Muslim Communities in Ghana: Mandate, Challenges and Prospects',* PhD Thesis, University of Ghana, 2013.

8. Kevin brice, *'A Minority Within A Minority : Report On Converts To Islam In The United Kingdom'*.M.Phil Religions Degree.Swansea University.2010.
9. Mohd. Nizam sahad, siti aishah chu abdullah, suhaila abdullah '*Malaysian News Report On Muslim Converts' Issues: A Study On Malaysiakini'* ,universiti sains malaysia penang, malaysia, international journal of humanities and social science vol. 3 no. 13, july 2013.
10. Ronit Ricci, (2011).*'Islam Translatrd: Literature, Conversion, and the Arabic cosmopolis of South and Southeast Asia'*, The University of Chicago press, Chicago and London.
11. Sayyid buhar musal kassim, mohd syukri yeoh abdullah & zawiyah baba(2013). '*A survey of problems faced by converts to islam in malaysia'* ,Journal Of social Science And Humanities , Vol. 8, No. 1, 085-097
12. Syed Farid Alatas,Singapore & Konrad Adenauer Foundation (KAF), *Singapore Covering Islam: Challenges & Opportunities for Media in the Global Village*, The Centre for Research on Islamic and Malay Affairs (RIMA). 2005
13. அபுல் அ∴லா மௌதூதி, (1982).*'இஸ்லாமிய வாழ்வு'*, இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.
14. ஆஷிக் அஹும், அ., (2011). *"எதிர்குரல்: சிறு வார்த்தைகள்-சிறுவர்கள்-இஸ்லாம்"*[Online] available: http://www.ethirkkural.com/2011/04/blog-post_19.html?m=1[Accessed] : [16.10.2017].
15. சண்முகம், ஆ., சித்திர புத்திரன், எச்., (2006).*'ஆய்வு முறையியல்'*, நிர்மலா நகர், தஞ்சாவூர்.
16. சாஹிர், ஐ.எல்.எம்., கலீல், எம்.ஐ.எம்., அமீர், எல்.எல்.எப்., (2012).*'ஆய்வு முறையியல்'*, சமூக விஞ்ஞானத் துறை, தென்கிழக்குப் பல்பலைக்கழகம், இலங்கை, ஒலுவில்
17. கைருல் பஷர், எச்.ஐ., (1998).*'ஸகாத்: கோட்பாடும் நடைமுறையும்'*, றாபிதா அந்-நளிமீய்யீன், பேருவளை.
18. பாஹிம், எம்.ஆர்.எம்., (2011). *"இஸ்லாமியமயமாகும் பிரிட்டன்"*, அல்ஹஸனாத், கொழும்பு: இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி.
19. ஜெயராசா,எஸ்., (2000).*'ஆய்வு முறையியல்'*, கல்வியியல் ஆய்வுக் கழகம் யாழ்ப்பாணம்.
20. *"இஸ்லாத்தைத் தழுவியோர்"* (2010).GLOBAL NATIONS, [Online]available: https://gnations.net/category/tamil-articles/%E0%AE%87%E0%AE%B8%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%88-%E0%AE%A4%E0%AE%B4%E0%AF%81%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%AF%E0%AF%8B%E0%AE%B0%E0%AF%8D/[Accessed] : [15.10.2017].
21. ஷாஇர் ஷௌகி, (2014).*'பல்லின சமூகத்தில் தனித்துவம் பேணலும் சகவாழ்வும்'* [Online]available : http://boosarysallih.blogspot.com/2014/07/rouf-zain_12.html?m=1 [Accessed] : [16.10.2017]

22. அஸ்ஹர் ஐயூப்கான், (2010). '*ஸகாத் கொடுப்போம் வறுமை ஒழிப்போன்*' [Online]available : http://archives.thinakaran.lk/2010/09/03/_art.asp?fn=r1009032[Accessed] :[22.11.2017]
23. பைஷல் இஸ்மாயீல், எம்., (2013). '*நோன்பைத் தூய்ரமயாக்கும் ஸகாதுல் பித்ர்*' [Online]available : http://www.importmirror.com/2013/08/blog-post_4649.html?m=1 [Accessed] : [22.11.2017]

Department of Census and Statistics-Sri Lanka (2012). Statistical Abstract of the Democratic Socialist Republicof Sri Lanka. Department of Census and Statistics-Sri Lanka, Colombo, Sri Lanka. [Online] http://www.statistics.gov.lk/districtstathbook.asp?district=anuradhapura [Accessed: 20.11.2017]

24. Anuradhapura District Map [Online] https://goo.gl/images/WqaLDi [Accessed] : [20.11.